185

185

வெளியீடு: 5

# தியாகத்தின் பெருமை

"வித்து கெடாமல் முளை வராது. அதுபோல்
நாம் தியாகம் செய்யாமல் சுயராஜ்யம் பெற முடியாது."

**விஷயங்கள்.**

| | |
|---|---|
| இராமனும் அரக்கரும் | பெரும் போ[illegible] |
| கண்ணனும் கர்ணனும் | நமது நாடு |
| ஐரோப்பிய நாடுகள் | கோடிப் போர். |

ஸ்ரீமதி ஆதிலக்ஷ்மி எழுதியது.

கமலா புத்தக சாலை
திருநெல்வேலி
1935

031,3x
N38
223214

3-பை.

# தியாகத்தின் பெருமை.

கீர்த்தியையும், பயனையும் ஆதரவாகக் கொண்டே ஒவ்வொரு தியாகமும் தோன்றுகிறதென்று கூறும்போது படிப்பவர்களுக்கு எதிர்மறையாகத் தோன்றலாம். ஏனெனில் கீர்த்தியையும், பயனையும் விரும்பாத தானமே தியாகமென்று கூறப்படும். கீர்த்தியையும் பயனையும் விரும்பிச் செய்யப்படும் தானம் தியாகமாக மாட்டாதென்று உலக வழக்கிருக்கிறது.

ஆனால் கீர்த்தியையும் பயனையும் விரும்பாமல் யாதொரு தியாகமும் செய்ய முடியா தென்பது எமது கொள்கை. தியாகம் செய்பவன் அதன் பயனை எதிர்பாராமல் தியாகம் செய்ய மனதில் நினைப்பதே அசாத்திய மாகிறது. அத் தியாகத்தின் பயன் தனக்கின்றிப் பிறர்க்காகும்பொழுது தான் தியாகமென்ற பெயரை அவ்வினை பெறுவதாகும். உதாரணமாக அரிச்சந்திரன், தன் சத்திய விரதத்தைக் காக்கும் பொருட்டுப் புரிந்த தியாகங்கள் அக்காலத்தவர்க்கே யன்றி எக்காலத்திலும் மனித சமூகத்திற்கு வாக்கின் பரிபாலனத்தைக் காக்கவேண்டியது ஒவ்வொருவனின் கடமை என்பதைக் காட்டப் பயன்படுவதாயிற்று. இங்கு அரிச்சந்திரனது கடமை, பயனை எதிர்பார்த்ததாயினும் அவனை அறியாது உலகத்தாருக்குச் சத்திய விரதத்தின் பொருட்டு வழிகாட்டுவதாயிற்று.

கடைசியாக விஸ்வாமித்திரனால் பரீக்ஷிக்கப்பட்டபோது,

"பதியிழந் தனம் பாலனை யிழந்தனம் படைத்த
நிதியிழந் தனம் இனிநமக் குளதென நினைக்கும்
கதியிழக் கினும் கட்டுரை யிழக்கிலேம்"..... என்று

கூறிய மறுமொழியினல் அவன் தன் கடமையில் காட்டிய வைராக்கியத்தினல் அவனது தியாகம் உலகில் என்றும் நிலை நிற்பதாயிற்று. அரிச்சந்திரனது இப் பெருங்குணம் அவனுக்கு இயற்கையாக வுள்ளதோ அல்லது குலக் கொள்கையோ வென்பதை நாம் இங்கு அறிய முடியாவிடினும், ஓர் அரசனுகிய ஜனத்தலைவன் தனது ஆட்சிக்குட்பட்ட ஜன சமூக வாழ்க்கையின் நல்லொழுக்கத்திற்குத் தானொரு உதாரணமாக இருந்து காட்டும் பொருட்டு இவ்வுயர்ந்த சத்தியாக்கிரகத்தைத் தன் கடமையாகக் கொண்டிருந்தான் என்று ஊகிக்க வேண்டியதாகிறது.

893
320.158

இஃது இவ்வாருக, தியாகம் காலத்தையும், இடத்தையும், அவசியத்தையும் பொறுத்தே, பெரிது சிறிது என மதிக்கப்படுகின்றதே யன்றித் தியாகத்தின் அளவைக் கொண்டு மதிக்கப்படுவதில்லை யென்பதை மறக்கவேண்டாம். எவ்வாறெனில், வள்ளுவர் கூறுவதுபோல்

"காலத்தாற் செய்த நன்றி சிறிதேனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது"

என்பதனல் உதாரணமின்றி உணரக்கிடக்கின்றது.

அன்றியும் தியாகத்தின் விலை அதற்குக் காரணமாகிய பொருள், வினை இவைகளின் அளவைக்கொண்டு மதித்தற்பாலதன்று. அது தியாகத்தின்பால் உண்டாகும் பயனைக் கொண்டு மதித்தற்பாலதாகும். மிகுந்த பொருட் சேதத்தால் உண்டாகும் பயன் அருமையாயினும் அஃது எண்ணிய காரியத்தின் ஓர் அளவேயாகையால், சிறந்த வெற்றிக்குச் சமானமேயாகும்.

22324
22324

031,6x N35


தியாகமானது, தியாகிக்கு இரண்டு வகைகளில் பயன் படுத்திக்கொள்ளத் தக்கதா யிருக்கிறது. அல்லது வேண்டற்பால தன்றி வெறுப்பதாயினும் பயனளிப்பதாகிறது. எனினும் அவை மனிதனது கொள்கைகளைப் போன்ற நற்பயனைத் தரத்தக்க தென்றும், தீயபயனைத் தரத்தக்க தென்றும் இருவகைத்தாகும். நற்பயனைத் தரத்தக்க தியாகங்களையே விவேகிகள் "தியாகம்" என்றழைப்பார்கள். தீய பயனைத் தரத்தக்க தியாகங்களை "மூடவினை" என்று அறிஞர் கூறுவர். இராவணனும், துரியோதனனும் தாங்கள் செய்த யுத்தங்களால் தர்மத்திற்கும், தங்கள் ஆட்சிக்குட்பட்ட ஜன சமூகத்திற்கும் அழிவையும், அபகீர்த்தியையும் உண்டாக்கியதால், தாங்கள் கொண்ட கொள்கையைப் பிடிவாதத்துடன் நிறைவேற்றினவர்களே யெனினும் உண்மைத் தியாகிகளாகமாட்டார்கள். ஆனால், அவர்களது கொடுங்குணங்களும், கொடுங்கோன்மையும் அழிய அவர்களே காரணபூதர்களாக இருந்தமையால், இராமனதும், பாண்டவர்களதும் ந[illegible] பயனைத் தரத்தக்க தியாகிகளுக்குப் பயன்களை அளிப்ப[illegible] வாக மட்டும் நின்றன.

## இராமனும் அரக்கரும்

இனி சமத்துவமான தியாகிகளைப்பற்றி ஆராய்வோம். எப்பொழுதும் சமத்துவமான தியாகிகள் நன்மையின் பொருட்டும், அல்லது தவத்தின் பொருட்டும் தமது கடமையாகச் சிறிதும் சுயநலம் கருதாது தியாகம் செய்வதேயாகும். யுத்த வீரர்கள் தங்களுயிர்களை சேனாதிபதிகளின் ஆக்கினைக்காக மட்டும் தியாகம் செய்வது அறிவற்ற தியாகமேயாகும். ஆனால், யுத்தவீரர்கள் சேனாதிபதியின் ஆணையோடு தேசாபிமானமும் மேற்கொண்டு தியாகம் செய்வது விவேகமான தியாகமாகலாம். தன்னை, அல்லது தன் நாட்டைக் காப்பாற்றிக்கொள்ளும் பொருட்டு, தலைவனது ஆணையின்றித்

தானே புரியும் தியாகம் மிகவும் சிரேஷ்டமான தென்று கூறலாம். ஆபத்துக்குட்பட்ட ஜீவராசிகளையும், திடீரென்று தன் உயிரையும் கொடுத்துக் காப்பாற்றுவது தெய்வத் தன்மைவாய்ந்த தியாகமாம். ஆனால், இவைகளனைத்தும் தலைப்பில் கூறியபடி சமத்துவமான தியாகங்கள் அல்ல. சமத்துவமான தியாகம்கேவலம் நன்மைகளை மட்டும் கோரிய தாய்த் தீமைகளின் முடிவான நாசத்தைக் கருதி தியாகிப்பதாகும்.

உதாரணமாக, ஸ்ரீராமன் தண்டகாரண்யத்தை அடைந்தபோது அவனைக்கண்டு ஆனந்தமடைந்த தபசிகள் கொடுங்கோல் புரியும் இராவணாதி அரக்கர்களை இராமன் வென்று தங்களைத் துன்பத்தினின்றும் விடுதலை புரிய வேண்டுமென்று கேட்டுக்கொண்ட பொழுது, மகரிஷிகள் தங்கள்சாபத்தினால் எதிரிகளைச் சாம்பலாக்கும் சக்திவாய்ந் ...ருக்கத் தன்னை வேண்டுவதேனென இராமன் வினவினன். ...த்தின் வல்லோர் "நாங்கள் மோட்ச நோக்கங்கொண்டு தவத்தால் கோபத்தைவென்று வாழ்வோ ராதலின் எங்களைக் காக்கும் பொருட்டு நீயே கொடுங்கோ லரக்கரைக் கொல்லக் கடவாய். அஃது உன் கடமையே யாகும். அதன் பொருட்டே நீ வந்திருக்கின்றாய். அன்றியும் நீ க்ஷத்திரியனன்றோ!" என்றனர். "எனது அரசாட்சியின் பொருட்டும், நீதியின் பொருட்டும் எனது நாட்டின் பொருட்டும் உங்கள் ஆசீர்வாதத்தால் அந்தக் கொடுங்கோல் அரக்கரை அழித்துக் காப்பது என் கடமையேயாகும். நானே செய்கிறேன். நீங்கள் அஞ்சவேண்டாம்" என்றனன் ஸ்ரீராமன். தவத்தோர் அரசகுமாரனது தியாகத்தைப் புகழ்ந்து "க்ஷத்திரிய புத்திரனே உனது தியாகம் கொடுங்கோல் அரக்கரின் கள்ள வல்லமையை அழிக்கத் தகுதியுள்ளதே யாகும். செய்து காப்பாயாக" என ஆசீர்வதித்தனர்.

இங்கு இராமனது தியாகம் கொடுமையின் வல்லமைக் குத் தகுதியுள்ளதாயும் நன்மையன்றித் தீமை பயவாததாயு மிருப்பதைக் காண்க. இதுவே சமத்துவத் தியாகமாகும். ஏனெனில்: தண்டகாரண்யத்தில் முனிவர்கள் கேவலம் தங் கள் ஆத்மாக்களே மோக்ஷ பதவியை அடைய வேண்டு மென்று சுயநலங் கருதித் தவம் புரிவோராவர். ஆகவே, அவர்கள் கொடுங்கோல் அரக்கரை அழிக்கக் கொடுக்கும் சாபம் அன்னோரைக் காக்கும் பயனை மட்டும் கொடுப்பதா யிருப்பினும் ஒரு வகையில் சுயநலங் கருதியதேயாகும். இராமனது தியாகமே சகல ஜீவராசிகளையும், ஆத்மாக்களையும், தாவர சங்கமங்களையும், தருமத்தையும் காப்பாற்றுவதைக் கடமையாகக் கொண்டது. ஆகவே, இராமனது தியாகம் சமத்துவத் தியாகமாகிறது.

## கண்ணனும் கர்ணனும்

உண்மையான சமத்துவத் தியாகம் சில சமயங்களில் கடமையைத் தாண்டி விடுகிறது. இதைத் தற்காலத்திலும் அடிக்கடி பார்க்கிறோம். முற்காலத்தில் கடவுள் தன்மையின் பொருட்டு உபயோகிக்கப்பட்டு வந்ததாகத் தெரிகிறது. உதாரணமாகப் பாரதப் போர் நிகழ்ந்தபோது பகவான் கிருஷ் ணன் விருத்தாப்பிய உருவந் தரித்து யுத்தகளத்தில்இரத்தம் வடியப் போர் புரிந்து களைத்து ஆசனத்தில் சாய்ந்து கிடந்த கர்ணனிடம் சென்று அவன் புரிந்துள்ள தர்மங்க ளனைத் தையும் தானமாக வேண்டினன். கர்ணன் அவ்வாறே மன மகிழ்ந்து தனது புண்ணியங்கள் முழுவதையும் கிருஷ்ண னுக்கு அம்பின் முனையால் தாரை வார்த்து தத்தம் செய்து கொடுத்தான். தானம் வாங்கிய கண்ணன் தன் உருவத்தைக் காட்டிக் கர்ணனை ஆனந்திப்பித்து அவனை ஆசீர்வதித்துச் சென்றனர். இவ்வற்புத சம்பவத்தைத் தகுதியான அழகிய

சொற்களாக இனிப்புடன் 'எழுதிக் காட்ட அகராதியிற் சொற்களா யிருப்பினும் எமக்கு வல்லமை யில்லையாயினும் கீழே கண்ட அமுத கவிகள் நன்கு விளக்குவனவாம் :

"தாண்டிய தரங்கக் கருங்கட லுடுத்த
தரணியிற் றளர்ந்தவர் தமக்கு
வேண்டிய தருதி நீயெனக் கேட்டேன்
மேருவி னிடைத் தவம் பூண்டேன்
ஈண்டிய வறுமைப் பெருந்துய ருழந்தேன்
இயைந்ததோன் றிக்கணத் தளிப்பாய்
தூண்டிய கவனத் துரகதத் தடந்தேர்ச்
சுடர்தரத் தோன்றிய தோன்றல்!"

"ஆவியோ நிலையிற் கலங்கிய தியாக்கை
அகத்ததோ புறத்ததோ அறியேன்
பாவியேன் வேண்டும் பொருளெலா நயக்கும்
பக்குவந் தன்னில்வந் திலையால்
ஓவிலா தியான்செய் புண்ணிய மனைத்து
முதவினேன் கொள்கநீ யெனக்குப்
பூவில்வா ழயனு நிகரல னென்றுற்
புண்ணிய மிதனினும் பெரிதோ!"

என்னமுன் மொழிந்து கரங்குவித் திறைஞ்ச
இறைஞ்சலர்க் கெழிலியே றனையான்
கன்னனை யுவகைக் கருத்தினு னோக்கிக்
கைப்புன லுடன்றரு கென்ன
அன்னவ னிதயத் தம்பின்வா யம்பா
லளித்தலு மங்கையா லேற்றான்
முன்னமோ ரவுணன் செங்கைநீ ரேற்று
மூவுல கமுமுடன் கவர்ந்தோன்.

இங்கு கர்ணனது தர்ம வல்லமை அர்ச்சுனனுடைய வெற்றியை அழிப்பதால், அவ்வெற்றிக்குத் தடை வரின் உலகில் நிலை நிறுத்தவேண்டிய தரும ஸ்தாபனம் அசாத்திய மாவதைக் கண்டு, தடைபுரியும் கர்ணனுடைய தர்மபலனைத் தானமாகப் பெற்றுத் தர்மயுத்தத்தை ஜயமுறச் செய்வதற்காக ஸ்ரீகிருஷ்ணன் தன் கடமையைத் தாண்டிக் கர்ணனிடம் வாங்கி அறநெறி மாறியே அறத்தைக் காப்பாற்றியதை அறிவுடையோர் ஆழ்ந்து கவனித்தல் வேண்டும். கர்ணனது தியாகம் எவ்வளவு சமரஸமுள்ளதோ அவ்வளவு சமரஸமும், நியதியும் கிஷ்ணனுடைய தருமத்தின் தியாகத்திலு மிருந்ததால் இந்த இரண்டும் சமரஸ தியாகமாகின்றது.

இதுபோலவே சிபிச் சக்கரவர்த்தி, மாபலி, ததீசிமகரிஷி, முதலியவர்களின் தியாகங்களும் சர்வ க்ஷேமத்திற்காகச் செய்யப்பட்டனவாகும். நம் நாட்டில் தியாகம் நம் வாழ்வுடன் பிணிக்கப்பட் டிருந்தது பிரத்தியக்ஷம். தற்போதும் இப் பிணிப்பை எவரும் பார்க்கலாம். நிற்க, இனி தற்காலத் தியாகங்களைப்பற்றி ஆராய்வாம்.

## ஐரோப்பிய நாடுகள்

சற்றேறக்குறைய சென்ற இருநூறாண்டுகளாக உலகத்தின் தியாகம் உண்மையுருவம், கள்ளவுருவம் என இரு பெயர்களைக் கொண்டு சஞ்சரித்து வருகின்றது. ஐரோப்பிய நாடுகளில் தியாகம் மிகுந்த உண்மை உருவுடன் எவ்வளவோ அருமையும் பெருமையும் வாய்ந்த நன்மைகளைச் செய்திருப்பதையும், செய்து வருவதையும் நாம் சரித்திர மூலமாக அறிந்தும், பிரத்தியக்ஷமாகத் தெரிந்தும் பொறுமையுடன் ஆனந்தப்படுகிறோம். அந்நாடுகளின் கைத்தொழிற் பெருமைக்கும் கல்வி ஆராய்ச்சிக்கும், விஞ்ஞான விருத்திக்கும் இந்த

உண்மைத் தியாகங்களே காரணங்கள். இந்தத் தியாக வித்தை அந்த ஐரோப்பிய நாடுகளின் அமைப்புகளுக்கும், ஜன விவேகத்திற்கும் தகுதியற்றதாக விருப்பினும், ஜீவ தயையையும் ஆதரவாகக்கொண்டு வளராவிடினும், அந்நாட்டாரின் தேசாபிமானமே அடிப்படையாக நிற்கின்றது. இந்தத் தேசாபிமானமாகிய பெருநெருப்பு நன்ருகப் பற்றி யெரிய ஆரம்பித்திருக்கும் ஒவ்வொரு ஐரோப்பிய தேசத்திற்கும் அவரவர்களுடைய அபிவிருத்திக்குத் தடையாக விருந்த மதம், அறியாமை, சோம்பல் முதலிய தடைகளை எரித்துச் சாம்பலாக்கிவிட்டது; அல்லது மாற்றிப் பலஹீனப்படுத்தி விட்டது. ஆகவே தேசாபிமானத்தால் எழுந்த தியாகம் நன்மைகளுக்கு மேல் நன்மைகளை உண்டாக்கிக்கொண்டு வளர்ந்து வருகின்றது. அவ்வளர்ச்சிகளையும் நன்மைகளையுங் கண்டு கீழ்நாட்டாராகிய நாம் பொருமைப்படுவது சகசமேயாயினும், சந்தோஷப்பட்டு அந்த ஐரோப்பியத் தியாகிகளை வாழ்த்தி அவ்வழிகளை நாமும் பின்பற்றி நடக்கத் தொடங்கியுள்ளோம். இவ்வாருக ஐரோப்பிய நாகரிகத் தியாகத்தைப் பின்பற்றிச் செல்லும் இந்தியராகிய நாம் அத் தியாகங்களின் நன்மைகளை மட்டும் கைக்கொண்டு தீமையானவைகளைக் கைவிட வேண்டியது மிகவும் அவசியம். இந்த முன் ஜாக்கிரதையில் நாம் தவறுவோமானல், நாமும் நமது புண்ய பூமியும் அந்த ஐரோப்பியரைப் போலவே அழிவான படுகுழியில் வீழ்ந்து தவிப்போமென்பதில் தடையில்லை.

## பெரும் போர்

சென்ற ஐரோப்பிய யுத்தத்தில் போர் புரிந்த சகல கக்ஷிக்காரரும் நல்வினையான தியாகத்தைச் செய்தார்களா? அன்றித் தீவினையான தியாகத்தைச் செய்தார்களா? என்று இங்கு ஆராயக் கடமைப்பட்டிருக்கிறோம். ஐரோப்பிய யுத்த

223214

மானது கேவலம் தங்கள் தங்கள் நாட்டைச் சத்துருக்களினின்றும் காப்பாற்றிக் கொள்வதற்காக ஏற்பட்டதல்லவென்பதைப் படிப்போர் மறக்கக்கூடாது. இங்கிலாந்து தேசத்தின் உலக சாம்ராஜ்யம் வளர்ந்து வருவதைக் கண்டு ஜர்மனியும், ஜர்மனியின் பெரும் புறக்கடலொத்த வர்த்தக கைத்தொழில் செழிப்பைக்கண்டு பிரான்சும் ஒன்றையொன்று பலவீனப்படுத்தி யழித்துவிட்டால் அந்நாடுகளின் வெளிநாடுகளையும், குடியேற்று பாகங்களையும் தாம் கைக்கொண்டு, அவர்களை நல்லவர்களாகும்படி அவ்வெளிய தேசங்களை யெல்லாம் ஆண்டு குபேரர்களாக்கிக் கொடுங்கோலுக்கும், படுகீர்த்திக்கும் சான்றாக விளங்கலாமே யென்ற எண்ணங்களே யன்றி வேறல்ல.

இங்கிலாந்து தேசம் மகாயுத்தத்தில் அடியோடு தோற்றுப் போயிருந்தால், இதற்குள் இந்தியாவின் கல்விச் சாலைகளெல்லாம் ஜர்மன் கல்விச்சாலைகளாகி, எங்கும் ஜர்மனியின் கொடி பறந்து நாமும் அன்னியருக்கு மூன்றுமுறை அடிமைகளாகி யிருப்போமென்பதில் என்ன சந்தேகமிருக்கக் கூடும்? லட்சக்கணக்கான சிப்பாய்களின் உயிர்களும், கோடிக் கணக்கான திரவியமும் பலிகொடுத்துப் போராடிய இந்த யுத்தமும் அழிவும் "உண்மையான தியாகம்" என்ற பதவியையடைவதெப்படி? இந்த மூடச் செய்கையைத் தியாகம் என்று கூறுவதைவிடக் "கொள்ளைக்கூட்டத்தாரின் பெருங்கலகம்" என்று ஏன் நாம் கூறக்கூடாது? தங்களுடைய நன்மையின் பெருக்கத்தைவிடத் தங்களுக்குச் சம்பந்தமில்லாத நிராயுதபாணிகளும், எதிர்க்கும் எண்ணமில்லாதவர்களுமான அந்நியர்களின் துன்பங்களை வளர்ப்பதிலும், அந்த அந்நியரின் கண்ணீரால் தங்கள் வஸ்திரங்கள் நனைவதில் ஆனந்தப்படுவதுமான எந்தக் கொடுவினையும் "உண்மையான தியாகம்" ஆகவே மாட்டாது. ஆக இந்நாட்டா ரியற்றிய

மகாயுத்தப் போராட்டத்தின் பலிதானங்களை எந்த வகையிலும் "தியாகம்" என்ற தலைப்பின் கீழ் கொள்ள வழியேயில்லை.

ஆனல் பெல்ஜியம், செர்வியா போன்ற சிறு நாடுகள் பேராசையின்றித் தங்களைக் காப்பாற்றிக்கொள்ளச் செய்த தியாகத்தை நாம் வாயாரப் புகழ்கின்ருேம். அவையே உண்மையான தியாகத்தில் சேர்க்கத் தகுந்தவைகளாகும். ஒரு பணக்காரன் அல்லது நிராயுதபாணியான செல்வன் வீட்டிற்குப்போய்க் கொள்ளையடித்துவந்த செல்வத்தை வாங்கி வைத்துக்கொண்டு அதற்குப் பதிலாகத் தன்புத்திரர்களைப் போற்றிப் புகழ்ந்த தாய்போலவே இப்போது ஐரோப்பா இருக்கிறது. தியாகம் என்ற பதத்திற்குச் சிறிதும் சென்ற மகா யுத்தம் உதாரணமாக மாட்டாது. ஆகையால், இத் தகைய கொடிய தியாகத்தைத் தற்கால இந்தியா புகழாமலும், புரியாமலு மிருக்கவேண்டும் என்ற கருத்தினலேயே இவ் ஐரோப்பிய யுத்தத்தின் அர்த்தத்தை எடுத்துக்காட்டினேம். இனி, தற்காலம் நாட்டு விடுதலைக்காக நாம் புரிந்த தியாகங்களைப்பற்றியும், செய்ய வேண்டிய தியாகங்களைப் பற்றியும் ஆராய்வோம்.

## நமது நாடு

முன் கூறியதுபோல், "ஐரோப்பிய உத்தம தியாகங்கள்" அந் நாடுகளின் தேசாபிமானத்தால் வளர்ந்ததுபோல நம் நாட்டுப் புதிய தியாகங்களும் தேசாபிமானத்தாலேயே வளரத் தொடங்கியிருப்பது ஆனந்திக்கத் தக்கதேயாகும். நம் நாட்டுத் தியாகத்தின் முதல் விதைகள், சுவர்க்கவாசிகளான ஸ்ரீ தாதாபாய் நௌரோஜி, கோபாலகிருஷ்ண கோகலே, பாலகங்காதர திலகர் முதலியோரால் நாட்டப்பெற்று, வளர்ந்து, பிற்காலத்தில் பல பக்தர்களால் ஆதரிக்கப்பட்டுப்

பெரு மரமாகி ஓங்கத் தொடங்கிவிட்டது. அந்தச் சரித விவரணம் இங்கு அவசியமின்மையால் விடுத்து அத் தியாக தருக்களாலாய சோலை நமது மகாத்மா காந்தியின் ஆட்சிக்குட்பட்ட பின்னர் உண்மையான தியாகம் எவ்வாறு காண்டவ வனமாயிற் றென்பதைப் பார்ப்போம். உண்மையான தியாகத்தின் பொருள் மாகாத்மாவாலேயே நம்மவர்களுக்குத் தெரிவதாயிற்று. எப்பொழுதும் தியாகம் துன்பத்தைப் பெறும் தாயாக விருப்பதை தேச ஜனங்கள் நன்கறியச் செய்வதே தகுந்த வழியென்று மகாத்மா தெரிந்து கொண்டார். ஆனால் துன்பத்தின் அனுபவ மறிந்த பின்னரே தியாகம் பலப்படுவதாக விருந்தமையாலும், தியாகமின்றித் துன்பம் அனுபவத்திற்கு வராதாகையாலும், முதலில் தியாகத்தைச் செய்து துன்பத்தை உதிக்கச் செய்வதே சரியென நினைத்து "ரிஷிப் புரோக்தமான சத்தியாக்கிரகம்" என்ற உபதேசத்தைப் போதிக்கத் தொடங்கினர்.

ருஷிய ஞானியான டால்ஸ்டாய் மஹரிஷியின் சுத்த விஞ்ஞான முறையை அடிப்படையாகக் கொண்டு நம் நாட்டின் இராஜதந்திர நிலைமைக்குத்தக்கபடி மாற்றி மகாத்மா உபதேசித்துவந்த இந்த மகாவித்தையான தத்துவமானது, இருப்போரும் இனி வருவோரும், ஒவ்வொரு குடும்பத்திலும், கிராமத்திலும், தேசத்திலும் என்றும் விடாமல் அனுஷ்டித்துப் பயனடைந்துவரத் தகுதியுள்ளதாயிற்று. எவ்வளவு தூரம் ஆங்கில ஆட்சியார் கட்டிடங்களும், சிறைகளும் கட்டித் தடுப்பினும் இந்த "மகா தியாகம்" என்ற நெருப்பு, அணைக்கும் நிலைமையை விட்டுத் தாண்டி வளர்ந்துவிட்டது. இந்த "மகா தியாகமே" நம் நாட்டுக்கு மட்டுமன்றி, ஒவ்வொரு அடிமை நாட்டிற்கும், உலக முழுவதற்கும் விடுதலையைக் கொடுக்கப் போகிற தென்பதை ஒவ்வொரு புத்திமானும் அறியக் கடவன்.

தியாகம் நன்மைக் கெனினும், தீமைக் கெனினும் கட்குடிக்குச் சமமானதாகும்; தீமையில் அதற்குரிய பயனோடு அபகீர்த்தியும், நன்மையில் அதற்குரிய பயனோடு கீர்த்தியு முண்டாவது சுபாவமாகும். விரிந்த அறிவோடும், ஆழ்ந்த கருத்தோடும் கேவலம் அடிமைப்பட்ட நம் நாட்டிற்காக மட்டுமன்றி, உலக முழுவதும் உஜ்ஜீவிக்கும் நோக்கத்துடன் மகாத்மாவும், அவரது உண்மைச் சீடர்களும் செய்ததும், செய்யப்போவதுமான தியாகம் அன்னாரின் கருத்தை நிறை வேற்று மென்பதில் எந்த விஞ்ஞானியும் சந்தேகப்பட மாட்டான்.

ருஷிய—ஜப்பானிய யுத்தத்தில், ஜப்பானிய கடற் படைத் தலைவர் அட்மிரல் "டோகோ" போர்ட் ஆர்தர் துறைமுகத்தை அடைந்து விடுவதற்குச் சில ஆயிர மனிதர்கள் நிறைந்த சில கப்பல்களை முழுகவைத்தல் மிகவும் அவசியமெனக் கூறியபோது, எத்தனை லட்சம் ஜனங்கள் தங்கள் உயிர்களைக் கொடுக்கத் தயாராய் இருப்பதாகத் தங்களுடைய ரத்தத்தால் எழுதப்பட்ட கடிதங்களை அனுப்பியிருந்தனர் என்ற உண்மையை நாம் படித்திருக்கிறோ மல்லவா? இந்த அற்புத தியாகத்தைக் கேட்கும்போது நமது உடல் மயிர்க் கூச்செரியவில்லையா? மனம் ஒரே காலத்தில் நடுக்கமும் ஆனந்தமு மடையவில்லையா? இவ்விதச் செய்கையை யன்றோ அறிவுடையார் தீரமான தியாகமென் றழைக்கின்றனர்!

நம் நாட்டு விடுதலைக்காக சென்ற வருடங்களில் மகாத்மாவின் படைகள் செய்த அதியற்புத தியாகங்களைப் புகழுந் திறமை நமக்கிருப்பதாகத் தெரியவில்லை. சற்றேறக்குறைய தேசமுழுவதிலும் உள்ள ஆண், பெண், சிறுவர்கள், விருத்தர்கள் வரை அச்சமயங்களில் எத்துன்பத்தையும் சகிக்கத் தயாரா யிருக்கவில்லையா? தங்கள் வாழ்நாட்களைத்

22324,

தேசத்திற்காகத் தத்தம் செய்துவிட்ட இளைஞர்களையும், பெரும் படிப்பாளிகளையும் நாம் எண்ணி முடியுமா?

## கொடிப் போர்

கல்வி யிழந்தும், வேலை யிழந்தும், ஆஸ்தி முழுவதையு மிழந்தும், ஒருதரம்போல் பலதரம் சிறைவாசம் செய்தும், சர்வ பரித்தியாகிகளாகித் தவிப்பவர்களை நாம் இன்னும் பார்க்கவில்லையா? தேச மாதாவின் விடுதலையே பெரிதாகத் தங்கள் உயிர்களைச் சிறையிலும், வெளியிலும் தத்தம் செய்தவர்களின் தியாகத்திற்கு விலை கொடுக்க நம்மால் முடிவதாகுமா? கீர்த்திபெற்ற ஹிந்தி பிரசாரணர் பரமாத்மா காலஞ்சென்ற வாஜபேயின் சரித்திரம் நாம் மறக்கற்பாலதாமோ? நாகபுரி கொடிப் போரில் நமது வாலிபர்களும், கற்றோரும், மற்றோரும் துணிந்து கூட்டங் கூட்டமாகக் குழுமிச் சென்று சிறைவாசத்தைச் சுவர்க்கவாசமாக மனமகிழ்ந்தேற்று அனுபவித்து ஆனந்தத்துடனும், வெற்றியுடனும், வீரத்துடனும் மீண்ட கீர்த்தியை நாம் மறக்க முடியுமா? இந்தப் பெரும் போரில் நம்மவர்கள் அடைந்த கீர்த்தி எதிர்காலத்துப் பாரத சுதந்திரத்திற்கு எழுப்பப்படுகிற சுதந்திரக் கோட்டைக்கு அஸ்திவாரமாக அமைந்ததை யாரால் மறக்க முடியும்?

இவ்வரிய வெற்றியைப் பற்றி ஒரு தமிழ்க் கவிஞன் மனதாரப் புகழ்ந்திருக்கும் அழகைப் பாருங்கள்:—

கொடிப்போரென் றுலகறியக் கூவியறை
  கொண்டதற்பின் குவிதோள் தட்டி
நொடிப்போதில் தவழ்வீரர் அணியணியாய்;
  தாய்நாட்டின் நோன்மை காப்பான்

படிப்போரும் படித்தோரும் படிப்புணர்த்தும்
பாவலரும் படைஞ ராகித்
துடிப்போடுஞ் சிறைபுகுந்து வெற்றியுடன்
மீண்டபுகழ் சொல்லற் பாற்றே!

வங்காளர், கூர்ச்சரர்கள், மாராடர்,
பாஞ்சாலர், வடுகர், மச்சர்,
அங்காளர், மனமுவந்த காசிவள
நாடர்முதல் கலந்த போரில்
கொங்காரும் தமிழ்வீரர் கொடிப்போரில்
பகைதடித்துக் கொண்ட வெற்றிக்
கெங்கேனு மிணையுரைப்ப மினித்தொலையோ
சுதந்திரத்தின் எல்லை யம்மா!

நம்பகைவர் மனங்கலங்க நாடெலா
முணர்வெழும்ப வைதீர் சீர்த்தி
"கும்பமுனி யனையதவன்" சிறையிருந்து
சிரங்குலுக்கிக் குளிர வுள்ளம்
தம்பியராம் "தமிழிளைஞர்" கொடிப்போரில்
தலைகொடுத்த தன்மை நோக்கில்
இம்பரினிச் சுதந்திரந்தான் எளிதெளிதென்
றெவ்வுலகு மியம்பு மன்றே.

சிமிழ்மணக்கும் முலைமாதர் திறம்வியப்பப்
பகைவர்மனம் திரிந்து வாட
அமிழ்தளிக்கும் பாரதத்தாய் வெற்றிதன
தாகவென ஆசி கூறத்
தமிழ்மணக்கும் நந்நாட்டின் தாய்ப்பாலை
உண்டமொழிச் சபதங் கூறி
உமிழ்கிரணக் கொடிகாத்த பெருங்கீர்த்தி
உலகில்நிலைத் தோங்கிற் றன்றே!

இவ்வித பல அரிய தியாகங்களை இனி எழுதப்போகும் இந்திய சரித்திரத்தை அலங்கரிக்கும் அணிகளாகச் செய்துள்ள நம் பாரத மக்கள் இனியும் அரும்பெருந் தியாகங்களைத் தேசத்திற்காகவும், இழந்த வீரதீர சுதந்திரங்களைப் பெறவும், அழிந்துபோன கலைகளுக்காகவும் செய்துவர ஆயத்தமாகவே யிருக்கிறார்கள் என்றும் கூறுவதில் தடையிருப்பதாக நமக்குத் தோன்றவில்லை.

நல்விரத்தமின்றி, ஜீவன் குறைந்து, பெரு மரணத் தூக்கத்தி லிருந்தெழுந்து, கண் தெரியாமையால் தடவிக் கொண்டிருந்த நமது காங்கிரஸ் மகாசபையையும், நாட்டாமையும் எழுப்பி, அவர்கள் நரம்புகளில் "சத்தியாக்கிரக" மெனும் ஜீவசக்தியைக் கொடுத்து, எழுப்பி, படைவகுத்து பழக்கி நடத்தி, தியாகம்! தியாகம்! தியாகம் என்ற பேரிகையை முழக்கி, தேசமக்களைத் தியாகிகளாகச்செய்து, தா[illegible] தியாகத்தின் இரகசியங்களைப் புரிந்து காட்டி உலகத்[illegible] காக்கவந்த மகாத்மா மோஹனதாச கரம் சந்திர காந்தி நீடூழி வாழ்க வென இயற்கைத் தெய்வத்தை நாம் தொழுவோமாக.

தியாகம் ஓங்கி வளர்ந்து இவ்வுலக முழுவதற்கும் ஓர் உதாரணமாகி எந்நாட்டிலும் மறத்தை வீழ்த்தி அறத்தை வளர்த்துக் காத்துப் பெருகுவதாக.

வந்தேமாதரம்! அல்லாஹூ அக்பர்!

# அவசியம் படிக்க வேண்டிய

# புத்தகங்கள்

223214

எல்லா ஜனங்களும் தேச ராஜீய விஷயங்களையும், சமூக விஷயங்களையும் தெரிந்துகொண்டு அபிவிருத்தியடைய வேண்டுமென்ற நோக்கத்துடன் நாங்கள் சொற்ப விலையில் பல பிரசுரங்களை வெளியிட்டு வருகிறோம். எல்லோரும் தினசரி பத்திரிகை படிக்க முடியாததாலும், தற்கால ராஜீய விஷயங்களைப்பற்றியும், பல நாடுகளின் தலைவர்களைப் பற்றியும் பலர் அறிந்துகொள்வது கஷ்டமாயிருப்பதாலும், யாவருக்கும் எளிதில் தெரியும்படி இந்நூல்கள் எழுதப் பட்டிருக்கின்றன.

எமது புத்தகங்கள் சிறுவர் முதல் பெரியவர்வரை படிக்கக்கூடிய முறையில் எளிய நடையில் உள்ளவை. விலையோ மிகக் குறைவு. விஷயங்களோ ஒவ்வொருவரும் தெரிந்துகொள்ளவேண்டியவை. ஆதலால் இப் புத்தகங்களை வெளிவந்தவுடன் வாங்கிக்கொள்ளவும். இந்த அபூர்வ சந்தர்ப்பத்தைக் கைவிடாதீர்கள்.

உலகத்திலுள்ள பல நாடுகளின் சரித்திரங்கள், வீரக் கதைகள், யுத்தங்கள், ராஜீய உடன்படிக்கைகள் முதலிய வற்றைப்பற்றி அறியவேண்டுமானால் எமது பிரசுரங்களைப் பாருங்கள். தற்போது உலகத்தைப் பிரமிக்கச் செய்துவரும் முஸோலினி, கமால்பாஷா, ஹிட்லர் முதலியோரைப்பற்றியும், நெப்போலியன், சந்திரகுப்தன் முதலிய பழம் பெரும் வீரர்களைப்பற்றியும், நமது தேசியத் தலைவர்களைப்பற்றியும் பல அபூர்வ நூல்கள் விரைவில் வெளிவரும்.

**கமலா புத்தகசாலை : : திருநெல்வேலி.**

---

ஹிலால் பிரஸ் :: :: திருநெல்வேலி.